# நகரபிதா

By-Election
VOTE
June 26

# தெரிவுக்கான இடைத் தேர்தல்

**ஜூன் 26**

TORONTO

# தபால் மூலம் வாக்களிப்பதற்கு விண்ணப்பியுங்கள்

இந்த இடைத் தேர்தலில் தபால் மூலம் வாக்களிப்பதை நீங்கள் தெரிவுசெய்யலாம். உங்களின் விண்ணப்பத்தை மே 1ம் திகதிக்கும் 26ம் திகதிக்கும் இடையில் toronto.ca/VoteByMail இல் சமர்ப்பியுங்கள்.

# MyVote என்ற பயன்பாட்டைப் பயன்படுத்தத் தயாராகுங்கள்

வாக்காளர் பட்டியலில் நீங்கள் இருக்கிறீர்கள் என்பதை மே 1 முதல் சரிபாருங்கள், toronto.ca/MyVoteஇல், உங்களின் வட்டாரத்தையும், நகர பிதா பதவிக்குப் போட்டியிடும் வேட்பாளர்களையும் கண்டறியுங்கள்.

## முக்கியமான திகதிகள்

### மே 1

- **தபால் மூலமான வாக்களித்தலுக்கு** விண்ணப்பிப்பதற்கான முதல் நாள்
- **வாக்காளர் பட்டியலில்** உங்களின் தகவல்களைச் சேர்ப்பதற்கான, மாற்றுவதற்கான அல்லது இற்றைப்படுத்துவதற்கான முதலாவது நாள்

### மே 15

- **Proxy** (வாக்களிக்கும் பிரதிநிதிக்கான) படிவம் ஒன்றைக் கோருவதற்கும், அதை அங்கீகரிப்பதற்கான சந்திப்பொன்றை ஒழுங்குசெய்வதற்கும் VoterRegistration@toronto.caக்கு மின்னஞ்சலிடுவதற்கான அல்லது 311இல் அழைப்பதற்கான முதல் நாள்

### மே 23

- **வாக்காளர் தகவல் அட்டைகள் (VICகள்)** வாக்களிப்பதற்குத் தகுதியுள்ளவர்களுக்குத் தபாலில் அனுப்பப்படும்.

TORONTO

    - மே 14, 2023 முதல் வாக்காளர் பட்டியலில் இருக்கும் வாக்களிப்பதற்குத் தகுதியுள்ளவர்களுக்கு மட்டும் VIC அட்டை தபாலில் கிடைக்கும். வாக்காளர் பட்டியலில் நீங்கள் இருக்கிறீர்கள், ஆனால் உங்களுக்கு VIC கிடைக்கவில்லை என்றால், Myvoteஐப் பயன்படுத்துவதன் மூலம் toronto.ca/MyVote இல் நீங்கள் அந்த அட்டையைப் பெற்றுக்கொள்ள முடியும்.

## மே 26

- **தபால் மூலமான வாக்களித்தலுக்கு** விண்ணப்பிப்பதற்கான காலக்கெடு மாலை 4:30 ஆகும்.

## ஜூன் 8 - 13

- **முன்கூட்டிய வாக்களிப்புக்கான** ஆறு நாள்கள், காலை 10 மணி முதல் மாலை 7 மணி வரை.

## ஜூன் 15

- பூர்த்திசெய்யப்பட்ட **தபால் மூலமான வாக்களித்தல்** பொதிகள் நண்பகல் அளவில் (பி.ப. 12) கிடைக்கவேண்டும்.

## ஜூன் 26, திங்கள்

- தேர்தல் நாள் காலை 10 மணி முதல் இரவு 8 மணிவரை

# வாக்களிப்பதற்கான தெரிவுகள்

## நேரில்

வாக்களிப்புக்கான நாட்களில் நீங்கள் நேரில் வாக்களிக்கலாம். முன்கூட்டிய வாக்களிப்பின்போது (ஜூன் 8 முதல் 13 வரை) அல்லது தேர்தல் நாளான, ஜூன் 26 திங்கள் அன்று நேரில் வாக்களியுங்கள்.

### தபால் மூலம்

படிமுறை 1: தபால் மூல வாக்களிப்புக்கு விண்ணப்பியுங்கள்

- மே 1 முதல், toronto.ca/VoteByMailஐப் பார்வையிடுங்கள்.
- விண்ணப்பிப்பதற்கான காலக்கெடு மே 26, வெள்ளி மாலை 4:30 ஆகும்.

படிமுறை 2: உங்களின் பொதியைப் பூர்த்திசெய்யுங்கள்

அங்கீகரிக்கப்பட்டவுடன், பூர்த்திசெய்யப்படுவதற்காக மே 23 முதல் தபால் மூலமான வாக்களிப்புக்குரிய பொதி உங்களுக்கு அனுப்பப்படும்.

- உறுதிசெய்தல் படிவத்தில் **கையொப்பமிடுங்கள்**
- வாக்குச்சீட்டில் **அடையாளமிடுங்கள்**
- பத்திரப்படுத்தப்பட்ட ரகசியத் தபாலுறையை (Secrecy Envelope) திருப்பியனுப்பும் மஞ்சள் நிற தபாலுறைக்குள் (Return Envelope) **செருகுங்கள்**

படிமுறை 3: உங்களின் பொதியைத் தபாலில் அனுப்புங்கள்

- பூர்த்திசெய்யப்பட்ட உங்களின் பொதியை Canada Post தபால்பெட்டி ஒன்றுக்கு எடுத்துச் செல்லுங்கள் அல்லது மஞ்சள் நிற ரொறன்ரோ தேர்தல்கள் (Toronto Elections) பெட்டி ஒன்றினுள் போட்டுவிடுங்கள்.
- ஒவ்வொரு வட்டாரத்திலும் நீங்கள் போட்டுவிட்டுச் செல்லக்கூடிய ஒரு மஞ்சள் பெட்டி ஜூன் 1 முதலாம் திகதி முதல் இருக்கும். அமைவிடங்கள் இங்கு பட்டியலிடப்பட்டுள்ளன: toronto.ca/VoteByMail.
- **ஜூன் 15 அன்று நண்பகல் (12 மணி)** அளவில் பூர்த்திசெய்யப்பட்ட பொதிகள் கிடைக்கவேண்டும்.

### கேள்விகள் அல்லது அணுகை பற்றிய தகவல்களுக்கு

- மின்னஞ்சலிடுங்கள் :elections@toronto.ca அல்லது அழையுங்கள்: 311

- மேலும் அறியுங்கள்: toronto.ca/VoteByMail

### Proxy மூலம் வாக்களித்தல்

நேரிலோ அல்லது தபால் மூலமாகவோ வாக்களிக்க உங்களால் முடியாவிட்டால், வாக்களிக்கும் பிரதிநிதி (Proxy) ஒருவரை நீங்கள் நியமிக்கலாம். வாக்களிக்கும் பிரதிநிதி என்பவர் உங்களின் சார்பாக வாக்களிக்கும் உங்களுக்கு நம்பிக்கையுள்ள, அத்துடன், நகரபிதா பதவிக்கான 2023 ஆம் ஆண்டு இடைத்தேர்தலில் வாக்களிக்கத் தகுதியான ஒருவராவார். பதில் வாக்காளர் நியமனப் படிவமொன்றைப் பூர்த்திசெய்து, நீங்களும் உங்களின் வாக்களிப்புப் பிரதிநிதியும் கையொப்பமிடுங்கள், அத்துடன் ஜூன் 26 ஆம் திகதி மாலை 4:30 மணிக்கு முன்பாக நகரசபை எழுத்தரின் (City Clerk) உறுதிப்படுத்தலைப் பெறுங்கள்.

Proxy படிவமொன்றைப் பெறுவதற்கும், அதனை உறுதிப்படுத்தப்படுவதற்கான ஒரு சந்திப்பை ஒழுங்குசெய்வதற்கும் VoterRegistration@toronto.caக்கு மின்னஞ்சலிடுவதன் மூலம் அல்லது 311ஐ அழைப்பதன் மூலம், Toronto Electionsஐ மே 15 முதல் தொடர்புகொள்ளுங்கள்.

மேலும் அறியுங்கள்: toronto.ca/ByElection

# யார் வாக்களிக்கலாம்

நகரபிதாவுக்கான 2023 இடைத் தேர்தலில் வாக்களிப்பதற்கு பின்வருவன உங்களுக்குப் பொருந்தவேண்டும்:

- ஒரு கனேடியப் பிரஜை; மற்றும்
- குறைந்தது 18 வயது; மற்றும்
- ரொறன்ரோவில் வசிப்பவர்; அல்லது
- ரொறன்ரோவில் வசிப்பவர் அல்ல, ஆனால் நீங்களோ அல்லது உங்களின் துணைவரோ நகரில் சொந்தமாகச் சொத்து வைத்திருக்கிறீர்கள் அல்லது சொத்துக்களை வாடகைக்கு விட்டிருக்கிறீர்கள்; மற்றும்
- சட்டம் எதுவும் நீங்கள் வாக்களிப்பதைத் தடைசெய்ய இல்லை.

நகரில் உங்களுக்குச் சொந்தமான அல்லது நீங்கள் வாடகை செலுத்தும் சொத்துக்கள் எத்தனை இருந்தாலும் ஒருமுறை மட்டுமே நீங்கள் வாக்களிக்க முடியும்.

# வாக்காளர் பட்டியலில் இணைந்துகொள்ளுங்கள்

வாக்காளர் பட்டியலில் உங்களின் தகவல்கள் சரியாக உள்ளனவா என்பதை, குறிப்பாகக் கடந்த தேர்தலுக்குப் பின்னர் நீங்கள் இடம்மாற்றியிருந்தால் அல்லது உங்களின் பெயரை மாற்றியிருந்தால் உறுதிப்படுத்துவது முக்கியமாகும். வாக்காளர் பட்டியலில் நீங்கள் இருந்தால், உங்களுக்கான வாக்காளர் தகவல் அட்டை தபாலில் உங்களுக்குக் கிடைக்கும்.

மே 1 முதல் மே 26 வரை பின்வருவனவற்றைச் செய்வதன் மூலம், வாக்காளர் பட்டியலில் உங்களின் தகவல்களை உறுதிபடுத்துங்கள், சேருங்கள் அல்லது இற்றைப்படுத்துங்கள்:

- பார்வையிடுதல்: toronto.ca/MyVote
- VoterRegistration@toronto.ca க்கு மின்னஞ்சல் செய்தல்
- 311ஐ அழைத்தல்

மே 26க்குப் பின்னர், முன்கூட்டிய வாக்களிப்பின்போது (ஜூன் 8 முதல் 13 வரை) அல்லது தேர்தல் நாளன்று (ஜூன் 26) நேரில் வாக்களிக்கச் செல்லும்போதும் வாக்காளர் பட்டியலில் உங்களைச் சேர்க்க முடியும்.

**வாக்காளர் பட்டியலில் நீங்கள் இருந்தாலும்கூட, வாக்களிக்கச் செல்லும்போது அடையாள அட்டையை நீங்கள் கொண்டுவர வேண்டும்.**

TORONTO

# வாக்களிப்பு நாள்கள்

## தேர்தல் நாள்

ஜூன் 26, 2023 திங்கட்கிழமை, காலை 10 மணி முதல் இரவு 8 மணிவரை. தேர்தல் நாளன்று வாக்களிப்பதை நீங்கள் தெரிவுசெய்திருக்கிறீர்கள் எனில், பல சொத்துக்களை நீங்கள் வைத்திருந்தாலும் சரி அல்லது வாடகைக்கு விட்டிருந்தாலும் சரி ஒருமுறை மட்டுமே நீங்கள் வாக்களிக்கலாம், அத்துடன் நீங்கள் வசிக்கும் வட்டாரத்தில் வாக்களிக்க வேண்டும்.

## முன்கூட்டிய வாக்களிப்பு நாள்கள்

ஜூன் 8 வியாழன் முதல் ஜூன் 13 செவ்வாய் வரையான, முன்கூட்டிய வாக்களிப்புக்கான ஆறு நாள்களிலும், காலை 10 மணி முதல் மாலை 7 மணிவரை முன்கூட்டி வாக்களிக்கலாம். MyVote ஐப் பயன்படுத்தி அல்லது toronto.ca/AdvanceVote ஐப் பார்வையிடுவதன் மூலம் உங்களின் வாக்காளர் தகவல் அட்டையிலுள்ள முன்கூட்டியே வாக்களிக்கும் அமைவிடங்களைக் கண்டறியுங்கள். முன்கூட்டியே வாக்களிக்கும் நாட்களில் நகர் முழுவதும் உள்ள வாக்களிக்கும் இடங்கள் எதிலும் நீங்கள் வாக்களிக்கலாம்.

# மாணவர்களுக்கான தகவல்கள்

நீங்கள் ஒரு மாணவராக இருக்கிறீர்கள், உங்களின் "வீடு" என நீங்கள் கருதுமிடம் பாடசாலைக்கு நீங்கள் செல்லாதபோது நீங்கள் வசிக்கும் இடமெனில், அதாவது அங்கு திரும்பிச்செல்வதற்கு நீங்கள் திட்டமிட்டிருக்கிறீர்கள் எனில், உங்களின் "வீடு" இருக்கும் மாநகர சபை மற்றும் தற்போது பாடசாலையில் படிக்கும்போது நீங்கள் வசிக்கும் மாநகர சபை ஆகிய இரண்டிலும் வாக்களிப்பதற்கு உங்களுக்குத் தகுதியிருக்கும்.

மேலும் அறியுங்கள்: toronto.ca/ByElection

# MyVote

நகரபிதாவுக்கான 2023 ஆம் ஆண்டு இடைத்தேர்தலில் நீங்கள் வாக்களிப்பதற்குத் தேவையான அனைத்தையும் MyVote இணையப் பயன்பாடு கொண்டுள்ளது.

மே 1 முதல், **toronto.ca/MyVote** ஐப் பார்வையிடுங்கள் அத்துடன் பின்வருவனவற்றுக்காக உங்களின் ரொறன்ரோ முகவரியை உள்ளிடுங்கள்:

- வாக்காளர் பட்டியலில் நீங்கள் உள்ளீர்களா என்பதைக் கண்டறிய
- உங்களின் வாக்காளர் பட்டியலில் தகவலைச் சேர்க்க, மாற்ற அல்லது இற்றைப்படுத்த (மே 26 வரை)
- நகரபிதா பதவிக்குப் போட்டியிடும் வேட்பாளர்களைப் பார்க்க

- உங்களின் வட்டாரத்தையும் வரைபடத்தையும் கண்டறிய
- உங்களின் வாக்காளர் தகவல் அட்டையைப் பார்க்க, பதிவிறக்க அல்லது அச்சிலெடுக்க (ஜூன் 1 முதல்)
- எங்கு, எப்போது வாக்களிக்க வேண்டும் என்பதைக் கண்டறிய (ஜூன் 1 முதல்)
- உங்களுக்கு ஒதுக்கப்பட்ட வாக்களிப்பு இடத்துக்கான அணுகல்தன்மை தொடர்பான தகவல்களைக் கண்டறிய (ஜூன் 1 முதல்)
- உங்களின் வாக்குச்சீட்டின் மாதிரி ஒன்றைப் பார்க்க (ஜூன் 1 முதல்)

வாக்களிக்கும் இடங்கள் மாறக்கூடும் என்பதால், நேரில் வாக்களிக்கச் செல்வதற்கு முன் MyVote இல் தொடர்ந்து சரிபாருங்கள்.

# வாக்காளர் தகவல் அட்டை

**வாக்காளர் தகவல் அட்டைகள் (VICகள்) மே 23 முதல் தபாலில் அனுப்பப்படவுள்ளன**. உங்களின் VICஐ வாக்களிக்கும் இடத்திற்கு எடுத்துச் செல்வது வாக்களிக்கும் செயல்முறையை எளிதாக்கும். உங்களின் VICஐ அடையாள அட்டையாகப் பயன்படுத்த முடியாது.

வாக்களிப்பதற்கு உங்களுக்கு VIC தேவையில்லை.

- வாக்காளர் பட்டியலில் நீங்கள் இருக்கிறீர்கள், இருந்தும் உங்களின் VIC உங்களுக்குக் கிடைக்கவில்லை, ஆனால் உங்களின் வீட்டிலுள்ள ஒருவருக்கு அது கிடைத்திருக்கிறது என்றால், அதுக்குக் காரணம் அட்டைகளைத் தொகுதி தொகுதியாகவே Canada Post அனுப்புவதாக இருக்கலாம்.
- ஒன்றுக்கு மேற்பட்ட VIC உங்களுக்குக் கிடைத்திருந்தால், உங்களின் அடையாளத்துடன் பொருந்தக்கூடிய மிகவும் துல்லியமான தகவல்களைக் கொண்ட அட்டையை நீங்கள் வாக்களிக்க வரும்போது வாக்களிக்கும் இடத்திற்கு கொண்டு வாருங்கள்
- உங்களுக்குக் கிடைத்த VICஇல் தகவல்கள் தவறாக இருந்தால், நீங்கள் வாக்களிக்கச் செல்லும்போது உங்களுடன் அந்த அட்டையை எடுத்துச்சென்று வாக்காளர் பட்டியல் திருத்தமொன்றுக்கான விண்ணப்பத்தைப் பூர்த்திசெய்யும்படி கேட்கலாம்.
- உங்களின் வீட்டில் வசிக்காத ஒரு நபரின் VIC உங்களுக்குக் கிடைத்தால், அட்டையில் உள்ள அனுப்பியவருக்குத் திருப்பியனுப்புக (Return to Sender) என்பதை அந்த அட்டையில் எழுதி Canada Post தபால் பெட்டி எதிலாவது போட்டுவிடலாம்.

மேலும் அறியுங்கள்: toronto.ca/VIC

TORONTO

# அணுகல் தொடர்பான தகவல்கள்

**வாக்களிப்பதில் ஏதாவது தடையை நீங்கள் எதிர்கொண்டால், elections@toronto.caக்கு மின்னஞ்சலிடுவதன் மூலம் அல்லது 311ஐ அழைப்பதன் மூலம் Toronto Electionsஐத் தொடர்புகொள்ளுங்கள்.**

## வாக்களிப்புக்கான இடங்கள்

வாக்களிப்பு இடங்கள் யாவும் நீங்கள் அணுகக்கூடியவையாக இருக்கும். ஒவ்வொரு இடத்தையும் பற்றிய தகவல்கள் உதாரணத்துக்கு, சாய்வுதளங்கள் (ramps), தானாகத் திறக்கும் கதவுகள் அல்லது வாக்காளருக்கு உதவி வழங்கும் அமைப்புகள் போன்ற தகவல்கள் இங்கே கிடைக்கும்: toronto.ca/ByElection.

## அணுகக்கூடிய வாக்களிப்புக்கு உதவும் உபகரணங்கள்

வாக்காளருக்கு உதவிசெய்யும் அமைப்பு (Voter Assist Terminal) என்பது, வலுவிழந்தவர்கள் அவர்களின் வாக்குச்சீட்டில் ரகசியமாகவும், சுயாதீனமாகவும் அடையாளமிட உதவும் வாக்குச்சீட்டுக் குறியிடும் ஒரு சாதனமாகும். தொடுதிரை, ஒலிமூலமான செயல்பாடு, braille key pad, sip/puff tube device, rocker paddle/foot switch மற்றும் எழுத்துரு அளவுகள் மற்றும் நிறங்களின் வித்தியாசத்தைச் சரிசெய்வதற்கான உருப்பெருக்கும் அம்சங்கள் ஆகியவற்றை இந்த அமைப்புகள் உள்ளடக்குகின்றன.

முன்கூட்டிய வாக்களிக்கும் இடங்கள் அனைத்திலும் வாக்காளருக்கு உதவி செய்யும் அமைப்புகள் உள்ளன. தேர்தல் நாளன்று வாக்காளருக்கு உதவிசெய்யும் அமைப்பைப் பயன்படுத்த வேண்டியதேவை உங்களுக்கு உள்ளது, ஆனால் உங்களுக்காக ஒதுக்கப்பட்ட வாக்களிப்பு இடத்தில் அப்படி ஒன்று இல்லை என்றால், 311ஐ அழைப்பதன் மூலம் உங்களின் வாக்களிப்பு இடத்தை மாற்றுமாறு கோரலாம்.

## ஏனைய சேவைகள்

- உங்களால் நேரில் வாக்களிக்க முடியாவிட்டால் தபால் மூலம் வாக்களிப்பதற்கு விண்ணப்பியுங்கள். விண்ணப்பிப்பதற்கு toronto.ca/VoteByMail ஐப் பார்வையிடுங்கள்.
- வாக்களிப்பது எப்படி என்பதற்கான அறிவுறுத்தல்கள் வாக்களிக்கும் இடங்கள் யாவற்றிலும் braille மற்றும் 26 மொழிகளில் கிடைக்கும்.

- பார்வைத்திறன் குறைவான வாக்காளர்களுக்கு உதவுவதற்காக அனைத்து வாக்களிக்கும் இடங்களிலும் உருப்பெருக்கப்பட்ட தாள்கள் கிடைக்கும்.
- வாக்களிக்கும் இடத்துக்குள் செல்வதற்கு உடல்ரீதியாக உங்களால் முடியவில்லை என்றால், வாக்களிக்கும் இடத்திலுள்ள இன்னொரு பகுதியில், உதாரணத்துக்கு, வாகனங்கள் நிறுத்துமிடம் அல்லது curbside (நடைபாதை ஓரம்) போன்றவற்றில் உதவி வழங்குமாறு கோரலாம். மேலதிக தகவலுக்கு 311 ஐ அழையுங்கள்.
- வாக்குச் சீட்டில் உங்களால் குறியிட முடியாவிட்டால் உங்களின் நண்பர் ஒருவரை நீங்கள் அழைத்துவரலாம் அல்லது உதவிசெய்யும்படி தேர்தல் அதிகாரியிடம் கேட்கலாம்.
- ஆதரவுவழங்கும் நபர்கள் மற்றும் சேவைசெய்யும் விலங்குகளின் பயன்பாட்டை அனைத்து வாக்களிக்கும் இடங்களும் வரவேற்கின்றன.
- வாக்களிப்புக்கென ஒதுக்கப்பட்ட இடத்தில் வாக்காளர் ஒருவருக்கு ஏதாவது தடை இருந்தால், வாக்களிப்பு இடத்தை மாற்றும்படி கோரமுடியும். முன்கூட்டியே 311 ஐ அழையுங்கள்.
- வாக்களிப்புக்கான நாள்களில் நேரிலோ அல்லது தபால் மூலமோ உங்களால் வாக்களிக்க முடியாவிட்டால், வாக்களிக்கும் பிரதிநிதி ஒருவரை நீங்கள் நியமிக்கலாம், VoterRegistration@toronto.caக்கு மின்னஞ்சலிடுங்கள்.
- செவிப்புலனற்றோருக்கான (TTY) இணைப்பை 416-338-OTTY (0889)இல் அழைப்பதன் மூலம் கேட்டல்திறன் அற்ற அல்லது கேட்டல் திறன் குறைந்தவர்கள் தகவல்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

மேலும் அறியுங்கள்: toronto.ca/AccessibleElections

# ஏற்றுக்கொள்ளக்கூடிய அடையாள அட்டைகள்

வாக்களிக்கச் செல்லும்போது அடையாள அட்டை (ID) ஒன்று தேவைப்படும். உங்களின் பெயர் மற்றும் தகுதியான ரொறன்ரோ முகவரியைக் காட்டும் ID ஒன்றைக் கொண்டுவருவதை நினைவில் வைத்திருங்கள். உங்களின் வாக்காளர் தகவல் அட்டையை அடையாள அட்டையாகப் பயன்படுத்த முடியாது.

## ஏற்றுக்கொள்ளக்கூடிய IDக்கான உதாரணங்கள்:

- ஒன்ராறியோ ஓட்டுநர் உரிமம் அல்லது மோட்டார் வாகன அனுமதி (வாகனம் பற்றிய பகுதி), நிழல்பட அட்டை
- இரத்து செய்யப்பட்ட தனிப்பட்ட காசோலை (cheque), கடன் அட்டை (credit card) அல்லது வங்கிக் கணக்கு அறிக்கை
- மின்சக்திக்கான, தொலைபேசிக்கான அல்லது cableக்கான, தொலைக்காட்சிக்கான, தண்ணீருக்கான, எரிவாயுவுக்கான பயன்பாட்டுக் கட்டணச்சீட்டு.அல்லது பொதுப் பயன்பாட்டு ஆணையமொன்றின் கட்டணச்சீட்டு
- வேலைவழங்குநரால் வழங்கப்பட்ட cheque stub, T4 statement அல்லது pay receipt
- Ontario Works அல்லது Ontario Disability Support Program இன் நேரடி வைப்பு அறிக்கை.
- சொத்து வரி மதிப்பீடு, வருமான வரி மதிப்பீட்டு அறிவிப்பு, பிள்ளைகளுக்கான வரி (Child Tax) நிவாரண அறிக்கை.
- அடமான அறிக்கை, குத்தகை அல்லது வாடகை ஒப்பந்தம்.
- இரண்டாம்தரப் பாடசாலை ஒன்றின் transcript அல்லது தேர்ச்சி அறிக்கை.
- இரண்டாம் நிலைக் கல்வி நிறுவனத்தில் மாணவர் குடியிருப்புக்குப் பொறுப்பான அலுவலகத்தினால் அல்லது அதிகாரிகளால் வழங்கப்பட்ட வளாக குடியிருப்பைக் காட்டும் ஆவணம்.
- ஒன்ராறியோ, கனடா அரசாங்கம் அல்லது ஒன்ராறியோவில் உள்ள ஒரு நகரசபை வழங்கிய அல்லது ஒன்ராறியோவில் உள்ள நீதிமன்றத்தால் சான்றளிக்கப்பட்ட ஆவணம்.
- ஒன்ராறியோவில் உள்ள, இந்திய சட்டத்தின் (கனடா) கீழ் நிறுவப்பட்ட Band Council ஒன்றின் ஏதாவதொரு ஆவணம்.
- காப்பீட்டுக் கொள்கை அல்லது காப்பீட்டு அறிக்கை.

TORONTO

- நிதி நிறுவனம் ஒன்றுடனான கடன் ஒப்பந்தம் அல்லது நிதிரீதியான வேறு ஒப்பந்தம்.
- T4E செலுத்திய வேலைவாய்ப்புக் காப்புறுதி (Employment Insurance) நிவாரணங்களின் அறிக்கை.
- Old Age Security T4A (OAS), Canada Pension Plan Benefits T4A (P), Canada Pension Plan திட்டப் பங்களிப்புகளின் அறிக்கை.
- பணியிடப் பாதுகாப்பு மற்றும் காப்புறுதிச் சபையின் நிவாரணங்கள் தொடர்பான அறிக்கை.T5007.
- CNIB அட்டை அல்லது வலுவிழந்தவர்களுக்குச் சேவைகளை வழங்கும் வேறொரு பதிவுசெய்யப்பட்ட அறக்கட்டளை நிறுவனத்தின் அட்டை.
- நீண்ட காலப் பராமரிப்பு இல்லங்கள் சட்டம், 2007இன் கீழ், நீண்ட காலப் பராமரிப்பு இல்லத்தில் வசிப்பதைக் காட்டும் அந்த இல்லத்தின் நிர்வாகியால் வழங்கப்பட்ட ஆவணம்,

உங்களிடம் ஏற்றுக்கொள்ளக்கூடிய ID இல்லை அத்துடன் வாக்காளர் பட்டியலில் நீங்கள் இல்லை என்றால், வாக்குச்சீட்டைப் பெறுவதற்காக உங்களின் ID உடன் திரும்பிவரும்படி கேட்கப்படுவீர்கள்.

# சமூக ஊடகம், வலைத்தளம் மற்றும் மின்னஞ்சல்

**Twitter:** @cityoftoronto

**Facebook:** City of Toronto

**Instagram:** @cityofto

**Website:** toronto.ca/ByElection

**Email:** elections@toronto.ca

# மொழிபெயர்ப்புப் பற்றிய தகவல்கள்

வேறொரு மொழியில் உங்களுக்குத் தகவல்கள் தேவைப்பட்டால் 311ஐ அழையுங்கள் அல்லது toronto.ca/elections/Votersஐப் பார்வையிடுங்கள்.

TORONTO